உ

# தமிழ்விண்ணப்பம்.

6563

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41


## முதற்பாகம்,

தமிழ் வரலாறு ௧ பக்கம்.
தமிழ்ப்பெருமை ௬ ,,
தமிழ்ச்சொற்காரணம் ௧௧ ,,

## இரண்டாம் பாகம்,

தமிழ்வளர்ச்சி ௧௨ ,,
தமிழ்ப்போதம் ௧௪ ,,

## மூன்றாம் பாகம்,

ஆக்கியோன் விண்ணப்பம் ௧௫ ,,
அச்சிட்ட நூல்கள் ௧௭ ,,


மாகறல். கார்த்திகேய முதலியார்.

கண்டி சென்னை.

சைதாப்பேட்டை ஸ்ரீமான். சு. தடையப்ப முதலியாரவர்களால்

சென்னை வேப்பேரி
ஸ்ரீ. விவேகாநந்த அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1914.

# மொழிநூல்

TIRUVANMIYUR, MADRAS-41

Since this little brochure is meant to give an idea and foretaste of my (மொழிநூல்) Tamil Philology, I herewith publish extracts of reviews about the book, which appeared within a few months of its publication. I have numerous other opinions and testimonials from well known Tamil scholars and lovers concerning the book, which for want of space I do not publish here.

1. *The Madras Mail*—'Pundit Karthikeya Mudaliar has broken ground in a fertile field of investigation which has scarcely yet been systematically explored and has thrown valuable light on a branch of study well worth the attention of competant scholars.'

2. *The Hindu*—'a welcome contribution to that almost unexplored province.'

3. *The Madras Standard*—'It is a book well worth a perusal by all those who desire to trace words and even languages to their very fountain source.'

4. *The Christian Patriot*—'Presenting as it does the results of researches of many long years, the book ought to be widely read—if not earnestly studied by all lovers of the Tamil Language.'

5. *The Indian Patriot*—'The author has taken pains to prove the hoary antiquity of the Tamil Language and the volume before us which has about **350** pages is printed on good paper and nicely got up and priced cheaply at **Rs. 2** for all the wealth of information it contains.'

மாகறல். கார்த்திகேய முதலியார்.

கண்டி, சென்னை.

உ

TIRUVANMIYUR, MADRAS-41

# தமிழ்விண்ணப்பம்.

## முதற்பாகம்.

மாட்சிமை வைகிய தமிழ்ப் பெருஞ் செல்வர்களுக்கு அன்பு கூர்ந்து மகிழ்கூர்ந்து எழுதிக்கொள்கின்ற

தமிழ் விண்ணப்பம் வருமாறு:—

தமிழ்ப்பெருஞ் செல்வர்காள்!

"வரய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக்கேண்மின்."

## தமிழ்வரலாறு.

உலகின்கண் ஒளியுடைப் பொருள்களுக் கெல்லாம் முதன்மையாகச் சிறந்து விளங்குகின்ற சூரியனிலும் மேற்பட்ட காட்சிப்பொருள் மற்றொன்றும் இல்லை யென்பது எல்லோருக்கும் எக்காலத்தும் துணிபு.

திருவருட் சந்நிதியில் எல்லாப் பொருளும் எல்லா இச்சையும் எல்லாச் செயலும் எல்லா அறிவும் காட்சியில் அவனாலே யுண்டாகின்றன என்பதும் துணிபே.

கண்ணுடைய மக்களுக்கு விண்ணில் சூரியனும், மண்ணில் மூங்கிலும் இயல்பாக ஒளிர்ந்து புறவிருளை அகற்றுவதற்குத் துணைப் படுவெனபோல முதல் சூரியன் காரியமாகிய சொல்லிலிருந்தும் பிறகு அநுகூலசம்பந்தமாக அம்மூங்கிலின் சொல்லிலிருந்தும் இயல்பாக உண்டாய *"ஒண்டமிழானது" அம்மக்களுக்கு அகவிருளை அகற்றுவதற்குத் துணைப்படுவதாய இயற்கை முதன்மொழி யென்பதும துணிபே.

தமிழ் சூரியனாலுண்டானமையின் ஒண்மையென்னும் அடைமொழிபெற்றது. பிறகு அதுவே மரபியல் வழக்காயிற்று. இயைபுண்மையின் காரணத்தின் அடைமொழியானது காரியத்துக்கு எய்திற்று.

---

* மொழிநூல் முதனிலையியல் ௧௮௮-ம் பக்கம் பார்க்க.

,, பாயிரவியல் ௮௫-ம் பக்கமும், இலக்கணவியல் ௬௧-ம் பக்கமும் பார்க்க.

"உரைதெரிந்துணரும் சம்பந்தன் ஒண்டமிழ் வல்லார்
கரைதிரையின்றியே நன்னெறி சேர்வரே" (ச—தே.)
(திருவுசாத்தானம்)

உடம்பில் ஒளிர்வது கண்; மண்ணில் ஒளிர்வது மூங்கில்; விண்ணில் ஒளிர்வது சூரியன்.

அதாவது மற்றைய இந்திரியங்களினும் கண்ணில் ஒளி, விளக்கமாகின்றதெனவும், மற்றைய ஓரறிவுயிர்களினும் மூங்கிலில் ஒளி, விளக்கமாகின்றதெனவும், மற்றைய கிரகங்களினும் சூரியனிடத்தில் ஒளி, விளக்கமாகின்றதெனவும் கொள்க.

(க) சுல்:—

க. சூரியன்.
உ. எழுச்சி.
ங. திரட்சி. சூரியனிடத்திலுள்ளது.
ச. வட்டம். ,,
ரு. வளைவு. வட்டத்திலுள்ளது.
சு. ஒளி. சூரியனிடத்துள்ளது.
எ. விரைவு. ஒளியின் தன்மை.
அ. நிறம். சூரியனிடத்திலுள்ளது
கூ. அழகு. ,,
கo. வெப்பம். ,,
கக நடு முதலியன. கிரகங்களுக்குள் சூரியன் போல் [வது.

இஃது * சூரியன் காரியமாகிய சொல்.

(உ) பல்:—

க. மூங்கில்.
உ. திரட்சி. மூங்கிற் புதரின் இயற்கைவடிவம்
ங. வட்டம்.
ச. கணு. மூங்கிலிலுள்ளது.
ரு. பொருத்தம். கணுப்போலுறுதியுடையது.
சு. கணை. மூங்கிற்கணை.
எ. வேர். கணுவிலுண்டாவது; அதாவது பொருத் [திலுண்டாவது.

* மொழிநூல் இலக்கணவியல் சுடு-ம் பக்கம் பார்க்க.

௯. முளை. வேரின்பின் உண்டாவது.
௧௦. வளர்ச்சி. முளையினின்றுண்டாவது.
௧௧. கூர்மை. முளைபோல்வது.
௧௨. சிறுமை. முளைபோல்வது.
௧௩. வெண்மை. முளையினிறம்போல்வது.
௧௪. மூன்று. கணுவினுட் கணுவின்தொகை.
௧௫. பிரிவு. கணுப்போலிடை விட்டுக்காட்டுவது.
௧௬. உட்டுளை. மூங்கிலிலுள்ளது.
௧௭. இசை. வேய்ங்குழலினின்றுண்டாவது.
௧௮. வெப்பம். மூங்கிலிலுள்ளது.

இப்பல் என்பது * மூங்கிலின் சொல்.

௧. **பல்.**

பல் = மூங்கில்:—

பல்——பலம் = மூங்கில்.

உப்பலம் = ஓர்நகக்குறி.

மூங்கிலிலை போல்வது.

உ. உபசர்க்கம்.

பல்—பால் = இடம். வேணுவனத்திலுள்ளது.

ஏழனுருபுமாம்.

பல்—பன் = ஓர்புல். மூங்கிலின மென்பது.

௨. **பல் = திரட்சி**

பல்——பாரம் = கடற்கரை. கரை. இயல்பாகத்திரண்
[டுகுவிவது

௩. **பல் = வட்டம்.**

பல்——பரி = குதிரை. வட்டகதியில் வல்லது.

௪. **பல் = கணு.**

பல்—பலா = ஆமணக்கஞ்செடி. கணுக்கள் நிறைந்
பல்—பரு = கணு. [தது

௫. ௬. **பல் = பொருத்து, வேர்**

பல்—— பற்று = பற்றல்.

பல்—பாலி = ஆலமரம். விழுதுவிடுகின்றமரமென்பது.

* மொழிநூல் இலக்கணவியல் ௪௧ம் பக்கமும் ௧௫௬-ம் பக்கமும் பார்க்க

விழுதெல்லாம் வேராம்.

பல்——பல்லி=கருணைக்கிழங்கு, இஞ்சி.

பல்——பலம்=கிழங்கு

கிழங்கெல்லாம் வேராம்

ஓர்வித்தினின்று கீழ்நோக்குவது வேர்; மேல் நோக்குவது முளை.

வித்தினது பொருத்தினடுவில் வேரும் முளையும் உண்டாகின்றன.

எ. பல்=கணை.

பல்——பல்லக்கு=ஓர் மங்களவூர்தி.

இயற்கையாகவளைந்த மூங்கிற்கணையாலாவது.

அ பல்=முளை, கரு; பல். முளைப்பது.

பல்——பாலி=முளை.

பாலிகை. முளைப்பாலிகை.

பாலிப்பாய்=கருக்கொள்ள வேண்டிப்படுத் [தற்குரியபாய்

இது தாய்வீட்டார் மணமகளுக்குக் கொடுப்பது.

பல்—பால்=அமிழ்தம். கருக்கொண்டபின் உண்டா [வது

பல்—பாலன்=இளைஞன். கருவிலுண்டானவன்

பல்—பார்வல்=குஞ்சு. கருவிலுண்டாவது.

உ—பதம்

பல்—பார்ப்பு=கோட்டில் வாழ்விலங்கின் பிள்ளை முத [லியன.

பு—விகுதி.

பல்—பலம்=விதை. முளைப்பது.

பல்—பரு=முளை. பருப்பு=வித்து. பு—விகுதி.

பரு—பருவம்=முளைக்கின்றகாலம்.

பரு—பரல்=விதை.

பல்—பாலி=பறவைகளின்முட்டை, பேன்.

முறையே கருவிலுண்டாவது.

வியர்வையிலீண்டாவதென்பது

பல்—பலி=எருது. கருவுண்டாக்குவது

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

பல்—பாளை=கருவிற் பிள்ளை

"பாளையாம் பருவம் செத்தும்" (சூ—மணி.)

களர்பாளை=ஓர் நெல். களரில் முளைப்பது.

பல்—பல்லம்—பல்லவம்=தளிர். முளையினின்றுண்டாவது.

௯. ## பல்=வளர்ச்சி.

பல்—பாலி=நன்கு வளர்ந்து பலன் தரும்நன்செய்.
பாலிநிலம்.

பல்—பார்=பூமி. வளர்ப்பது.

பல்—பாரி=ஓரரசன். குடிகளை வளர்ப்பவன்.

பல்—பாரி=மனைவி. இல்லறம் வளர்ப்பவள்.
லகாம் ரகரமாகும்.

௧0. ## பல்=கூர்மை.

பல்—பலம்=ஆயுதநுனி.

பல்—பல்லம்=அம்பு. கூரியது.

பல்—பாறு=பருந்து. கூரியமூக்குடையது.

பல்—பாறு=மரக்கலம். கூரியவாளுடையது.
இது திமிங்கில முதலியவற்றை அறுப்பது.
பாறு—பாறல்=மரக்கலத்தின் நிகழ்ச்சி.

பல்—பலி=பன்றி.

பல்—பன்றி. முள்ளம் பன்றியென்பது.

௧௧. ## பல்=சிறுமை.

பல்—பல்லி=சிற்றூர்.

பல்—பலி=இழிவு.

௧௨. ## பல்=வெண்மை.

பல்—பலிதம்=மயிர்நரை.

பல்—பலி=சாம்பல், நீறு.
மூங்கில் எரிவதாலாவதுமாம.

௧௩. ## பல்=மூன்று.

பல்—பன்மை=இரண்டிற்கு மேற்பட்டது

கச. **பல்=பிரிவு.**

பல்—பால்=பிரிவு.
பல்—பாலி=பங்கு

கரு. **பல்=உட்டுளை.**

பல்—பாலி=கள். உள்ளிருந்து கசிவது.
பல்—பள்=குற்றம். புரைபோயது
பளகு=குற்றம்

கசா. **பல்=இசை.**

பல்லியம்=வாச்சியம். உ—பதம்.
பல்லவி=ஆரம்பராகம். வி—விகுதி.
பல்—பலுகு=வார்த்தை. வேய்ங்குழலினிசைபோல்வது.

கஎ. **பல்=வெப்பம்.**

பல்—பாலை=பாலைநிலம். வெப்பமானது.

இங்ஙனமே எல்லாச் சொற்களும் உண்டாகின்றன. மொழிநூலில் விளக்கப்பட்டுள்ளன.

பல் என்னும் சொல் எவ்வாறுண்டாயதெனின்?
பிற்கூறுதும்.

## தமிழ்ப்பெருமை,

தமிழ், சிறுவர் மூப்புற்றோர் வலியில்லார் நோய்கொண்டோர் முதலோருக்கும் உச்சரிக்க எளிமையாக இருப்பதற்குப் * பிறப்பிடத்தால் இயல்பாக ஒத்துள்ள சிறு சிறு சொற்களையுடையது; சிவன் திருமால் முதலோரும் பேசும் பண்டைய மங்கலப் பெருமையுடையது; செயற்கருஞ் செயல்களைச் செய்த தெய்வத்தன்மையுடையது; பாலி திமல் முதலிய பல பல பாஷைகளுக்கெல்லாம் முதன்மொழியாகவுள்ளது; ஆரியவேதங்களுக்கு நெடிதுகால முற்பட்டது; ஏகாட்சரமந்திர முதலியவற்றால் சிறந்தது; தனக்குமேல் ஒருபாஷையும் இல்லாதது; ஆரியத்தோடு ஒருப்பாடுடையது; அறிதுயில் மொழியாகவுள்ளது; காட்சிப்பிரமாணத்தோடு இயற்கையிலட்சண அமைதியுடைய மகிழ்வினை விளைக்கும் காரணச்சொற்களையே யுடையது;

* மொழிநூல் இலக்கணவியல் ௬௨ ம் பக்கம் மயக்கம் பார்க்க.

நாவிற்கெளிமையாய சொல்வளர்ச்சி யுடையது; தொழிலின்
இயற்கைத் தன்மையை விளக்கும் சொற்சிறப்புடையது ; மணி
மலையிற்பிறந்து இமயகூட முதலிய சத்தகூடங்களிலும் வளர்ச்சி
பெற்றது ; சுருங்கச்சூறலென்னும் அழகில் விரிந்த பொருட்
பொதிவுடையது ; மனதின்தோற்றங்களை விளக்குவதற்கு
நுணுக்கமாகவும் தத்துவவகையாகவும் அமைந்த சொற்பொலி
வுடையது ; மனோபாவனைக்கேற்ற செம்பாகமும் தார்க்கிக
வழக்குமுடையது ; செவிக்கு இன்பந்தரும் வைதர்ப்பநெறிக்கு
முதற்காரணமாகவுள்ளது ; கருத்துமறையாதபடி யாழுக்க
மைந்தபண்ணின் அழகுடையது ; மணிமலை முதல் இமயமலை
வரையில் நெடிதுகாலம் அரசாட்சிப் பெருமையிலிருந்த வை
தீகமேம்பாடுடையது ; ஓர் நூலின் பொருளை ஓர்சொல்லில்
அடக்கி விளக்கு மாட்சியுடையது ; ஓர் பொருளைப்பற்றிப்பல
ஆண்டுகளாக உழந்த உழைப்பினை அப்பொருளைக் குறிக்கும்
அச்சொல்லால் அறிவிக்கும் சூழ்ச்சியுடையது ; ஆரியத்துக்கு
முன்னுள்ள கிரந்தத்திற்கும் நெடிதுகால முற்பட்டது ; ஆரி
யம் கிரீக்குலத்தீன் எபிரேய முதலியவற்றிலும் கலந்துள்ளது;
கன்னட முதலிய தேசபாஷைகள்போல இடப்பெயர் கொள்
ளாது ஆரியம் போலப்பாஷையின் பெயர் கொண்டுள்ளது; பா
ஷையின் பெயர்கொண்டவையே முதற்பாஷையாம் ; தமிழ்
இயற்கை யோசையாலும் செயற்கை யோசையாலும் முதன்மை
பெற்றது ; ஆரியம் செயற்கையிற் செயற்கை யோசையாலும்
விசாக்க முதலியவற்றாலும் முதன்மைபெற்றது. தமிழ் என்
றும் உரைவழக்குள்ளது ; ஆரியம் என்றும் உரைவழக்கில்லது.
ஆரியம் கற்கப்புகின் வேறோர்பாஷையின் உதவியால்தான் கற்
கவேண்டும் ; தமிழ் கற்பதற்கு அவ்வுதவி வேண்டியதில்லை ;
தமிழ் கொண்டே தமிழ் கற்கலாம் ; பிறபாஷையும் கற்கலாம்.
தமிழ் ஆரியச் சொற்களை வேண்டாது நடைபெறும் ஆற்றலு
டையது ; மற்று எப்பாஷைக்கும் அவ்வாற்றல் இல்லை. தமிழ்
எளிய உச்சரிப்புடையது; ஆரியம் கடின உச்சரிப்புடையது.
தமிழ் இயற்கைத்தாதுக்களை யுடையது ; ஆரியம செயற்கைத்
தாதுக்களையுடையது. தமிழ் அநுசூத சம்பந்த தாதுக்களை
யுடையது ; ஆரியம அச்சம்பந்த மில்லாத தாதுக்களையுடை
யது தமிழ் மொழிமுதலில் செயற்கை யெழுத்தோடுவாராது;
ஆரியம் செயற்கையெழுத்தோடுவரும். தமிழ்ச்சொற்கள் பெ

ரும்பான்மையும் இயல்பீறுடையது; ஆரியச்சொற்கள் பெரும பான்மையும் செயற்கை யீறுடையது.

இயற்கைப்பொருளின் பெயரும், அப்பொருளின் புடை பெயர்ச்சியாகிய இயற்கைவினையும் தமிழில் நிரம்பியுள்ளன.

ஒரு பொருளின் பெயர் எப்பாஷையல் மிகுதிப்பட்டிருக் கின்றதோ அப்பாஷைவழங்கு மிடத்தில் அப்பொருளைப்பற்றி நன்கு அறிந்தவர்களென்றும், அநுபவித்தவர்களென்றும், அப்பாஷையயே முதற்பாஷை யென்றும் துணிதல்வேண்டும்.

தமிழின்கண்ணே நிலத்தின்பெயர், நீரின்பெயர், மரக்க லத்தின்பெயர்; யாழின்பெயர், யானையின்பெயர், சூரியன் பெயர், நட்சத்திரங்களின் பெயர், இராசியின் பெயர், முதலியன வெல்லாம் மிகுதிப்பட்டிருக்கின்றன.

சூரியன் பெயரும் மூங்கிலின் பெயரும் தமிழில் மிகுதி. தமி ழில் உலகம் குழந்தைப் பருவமாக இருந்த காலத்துண்டான எழுத்தும் சொல்லும் சந்தியும், உலகம் முதிர்ந்த பருவம் அடைந்தகாலத்துண்டான எழுத்தும் சொல்லும் சந்தியும இருக் கின்றன. காரணச்சொற்களையில்லாத பாஷைகளெல்லாவற்றுக் கும் காரணச்சொற்களையுடைய பாஷையே ஆதாரமாகின்றது.

## தமிழில்.

க. ஐகார ஔகாரங்களில்லாத காலமு முண்டு.
உ. எகர ஒகரங்களில்லாத காலமு முண்டு.
௩. ளகர ழகரங்களின்றி லகரமொன்றுமே யிருந்த காலமு முண்டு.
௪. இயற்கைநகரமெய்யீற்றுச் சொற்களே நடை பெற்ற காலமு முண்டு.
ரு. ஆகார உயிரீற்றுச் சொற்களும் மகர லகர மெய் யீற்றுச் சொற்களுமே இருந்த காலமு முண்டு.
சா. ஐகார ஈற்றுச்சொற்களில்லாத காலமு முண்டு.
எ. றகர னகரங்களில்லாத காலமு முண்டு
அ. சந்தியில்லாத காலமு முண்டு.
௯. விகுதி முதலியன இல்லாத காலமு முண்டு.
கo. குற்றிய லுகரமே யில்லாத காலமு முண்டு.

௧௧. வரிவடிவில்லாத காலமு முண்டு.
௧௨. வட்டெழுத்தே யிருந்த காலமு முண்டு.
௧௩. கோலெழுத்தே யிருந்த காலமு முண்டு.
௧௪. இயல்புப் புணர்ச்சியே யிருந்த காலமு முண்டு.
௧௫. ஒருமை சின்மை பன்மை யென மூவகை யெண்களின் வழக்கும் இருந்த காலமு முண்டு.
௧௬. வேற்றுமை யில்லாத காலமு முண்டு.
௧௭. நிகழ்கால மொன்றுமே யிருந்த காலமு முண்டு.

இவ்வொவ்வோர் காலத்தில் ஒவ்வோர் பாஷை பிரிந்திருக்கின்றது. விரிப்பிற் பெருகும்.

இன்னும் தமிழ் சௌரமானபாஷை; ஆரியம் சாந்திரமானபாஷை. சௌரமானத்துக்கு நட்சத்திர முக்கியம்; சாந்திரமானத்துக்குத் திதி முக்கியம்; சௌரமானத்தின் பிறகு தான் சாந்திரமான முண்டாயது.

சூரிய மத்திய சித்தாந்தம் பூமத்திய சித்தாந்த மென்னும் சோதிட சித்தாந்தம் இரண்டனுள் தமிழ் சூரிய சித்தாந்தமாகின்றது. அது ஞாயிறு முதலிய ஒருமொழிச்சொற்களால் நிலைநிறுத்தப்படும்.

சூரியன் மற்றைய கிரகங்களுக்கு நடுவில் நின்று தலைமை பெற்றதுபோல அச்சூரியனாலுண்டாய தமிழ் மற்றைய பாஷைகளுக்கெல்லாம் நடுவில் நின்று தலைமை பெற்றுள்ளது. கல்லூரிமுதலியவற்றில் தலைமையாயினர் நடுவில் இருந்தால் தான் ஏனைய ஆசிரியன்மார் முதலியோரை ஆராய்தல் கூடும்.* இத்தலைமை, இயற்மை அமைதியாம்.

ஒருவன் தமிழையும் ஆரியத்தையும் நன்கு கற்பானாயின் உலகில் மற்றைப் பாஷைகளிலுள்ள எல்லா உச்சரிப்புகளையும் கற்றவனாகின்றான். அவன் மற்றை எப்பாஷை கற்பினும் அவன் உச்சரிப்பு கொச்சையாகமாட்டாது. எல்லா உச்சரிப்புகளும் தமிழ் ஆரிய மென்னும் இரண்டு பாஷைகளிலேயே அடங்கியிருக்கின்றமையின் பெரியார் இவ்விரண்டுமே சிறந்தனவென எடுத்துக்கொண்டனர். முனிவர்களால் திருத்தப்பட்டனவும் இவ்விரண்டுமேயாம்.

* மொழிநூல் பாயிரவியல் ௩௬-ம் பக்கம் பார்க்க.

இவ்விரண்டு பாஷைகளினுடைய சந்தச்சுவையின் வேறுபாட்டை விளக்கும்பொருட்டே * மணிப்பிரவாளநடையுண்டாகப்பட்டது. இந்நடை தமிழ் இயற்கைச்சந்தஇன்பமுடையதென்பதையும், ஆரியம்செயற்கைச்சந்த இன்பமுடையதென்பதையும் விளக்கா நிற்கும். மற்றைய பாஷைகளுக்கு இம்மணிப்பிரவாளநடை கிடையாது. தமிழ் ஆரியமென்னும் இரண்டு பாஷைக்குமே இந்நடை யுரியது.

சுவடு அழக்கு முதலிய முகத்தலளவைப் பெயர்களையும், ஒன்று இரண்டு முதலிய எண்களின் வரிவடிவையும் ஆராயினும் தமிழ், உலகில் முதன்மொழி யென்பது வலியுறுகின்றது.

எண்களின் வரிவடிவின் ஆராய்ச்சியால் முதலில் பாஷை ஒன்று என்பதும், அது தமிழென்பதும் துணியப்படும்.

இயற்கையாகிய எண்குணங்களையுடைய முழு முதற்பெருமான் இயற்கை மொழியாகிய தமிழின்கண்ணேயே முதல் முதல் வேதம் செய்தருளினன்.

அது படன முறைமையை யுணர்த்தும் கிடை பாழி முதலிய ஒருமொழிச்சொற்களால் துணியப்படும்.

* வினையினீங்கி யென்னும் தொல்காப்பிய சூத்திரத்தாலும் தமிழில் வேத முண்மை விளக்கமாகின்றது.

இந்தியா ஆபாலிகா தென் அமெரிக்கா ஔத்திராலியா என்பவை ஓர் நிலமாகவும், விந்தியமலை முதல் இமயமலை வரையில் கடலாகவும் இருந்த அப்பண்டைக்காலத்திலே அவையெல்லாம் இயற்கை நிலப்பிரிவாகிய குறிஞ்சித்திணை முதலியனவாக இருந்தமையின் ஆண்டு வழங்கிய பாஷை தமிழே.

குறிஞ்சி முதலியவற்றுக்கெல்லாம் கருப்பொருள் கூறி முடித்தார், அவ்வத்திணைகளுக்குரிய பாஷை கூறாமையின், அவ்வியற்கை நிலப்பிரிவில் இயற்கை மொழியாகிய தமிழே யிருந்ததென்பது துணியாகின்றது.

சோதிடநூலார் கிரகங்களுக்குப் பாஷை கூறப்புகுங்கால் தமிழ்க்குச் சந்திரனையும், தெலுங்கிற்குச் சூரியனையும், ஆரி

* மொழிநூல் பாயிரவியல் ௱௯-ம் பக்கம் பார்க்க

* மொழிநூல் பாயிரவியல் ௬௩-ம் பக்கம் பார்க்க.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR. MADRAS-41.

யத்துக்குக் குருவையும் விதந்து கூறி மற்றைய பாஷைகளுக் குச்சனி முதலியவற்றைக்கூறுகின்றமையின் சோதிட சித்தாந்த முண்டான அக்காலத்திலேயே இம்மூன்று பாஷைகளுமே கன்னிலையில் இருந்தனவெனப் புலனாகின்றது.

இங்ஙனம் தமிழின்பெருமைகள் அளவில்லனவாம். ஆயின் பழந்தமிழ்க்குமுன் கைக்குறி கட்குறி ஒலிக்குறி பொருட்குறி யென்பவையும், நுண்ணறிவும் நாகரீகமும் இருந்தன.

ஈசல் கொட்டலின் வேறு பாட்டாலும், கைதட்டலின் வேறுபாட்டாலும் முதன்மக்கள் தமது கருத்தினை அறிவித்து வந்தமையின் இவை யெல்லாம் அவ்வொலிக்குறியுள் அடங்குவனவாம்.

முதன் மக்கள் தம் கருத்தினை ஊதி அறிவித்தற்கு எப்பொழுதும் தம்பக்கத்தே சங்கினை வைத்துக்கொண்டிருந்தமையின், இடவாகு பெயராய் அப்பொருளை யுணர்த்திற்று.

சங்கம்=பக்கம், நந்து.
சங்கம்—சங்கு=“

சங்கமென்பது முதல், பக்கத்தையும் பிறகு பக்கத்தி லுள்ள நந்தினையும் உணர்த்திற்றென்க.

சங்கம் பழந்தமிழ்ச்சொல்.

சங்கம்=பக்கம், தோள். பக்கத்தேயுள்ளதென்பது.
சங்கதாளம்=தோட்கோப்பு.

சில ஒலிக்குறிகள் சீனபாஷையோடு கலந்திருக்கவேண்டும்.

முற்கூறப்பட்டனவெல்லாம் மொழிநூலிலும் (Philology) இனி அச்சிடப்படும் பழந்தமிழ் முதலியவற்றிலும் பரக்கக் காணலாம்.

## தமிழ்ச்சொற்காரணம்.

தமிழ் சூரியனாலுண்டானமையின் சூரியனை யுணர்த்தும் தாமமென்பது தமில் தமிள் தமிழ் என வழி மரித்திரிந்து பாஷையின் பெயராக நின்றது.

தாயம்=சூரியன், வெப்பம்,
தாம—தெர்மா=வெப்பம். (கிரீக்கு)

(Thermos)

தெர்மாமெட்டர்=வெப்பத்தின் அளவையுணர்த்தும் கருவி.

(Thermo meter)

தகரமும் மகரமும் சிறுவர் முதலோர்க்கு உச்சரிக்க எளிதாக இருத்தலின் * தாமம் தமில் தமிள் தமிழெனத்திரிந்ததெனலே துணிபு இதனை சூரியனே விச்சாதிபதி யென்பதும் துணியப்படும்.

சில சொற்களின் ஈற்றில் லகரமெய் வந்தடைதல் இயல்பு. உ—ம் பக்கம்—பக்கல் மருங்கு—மருங்குல்.

## இரண்டாம் பாகம்.

### தமிழ்வளர்ச்சி.

இனித் திருவாவடுதுறை தருமபுரமுதலி மடாதிபதிகளாகிய மகான்களும், புதுக்கோட்டை இராமநாதபுரம் சேற்றூர் எட்டயபுரம் சிங்கம்பட்டி மலையாளம் மைசூர் முதலிய சுதேச மன்னர்களும், சீர்காழி வடபாதிமங்கலம் உத்தமபாளையம் உடையார்பாளையம் துறையூர் திருநெல்வேலி காட்டுப்புத்தூர் சேலம் ஆனைமலை செய்யூர் குறும்பேடு கயம்பாக்க முதலிய சமிந்தார்களும் பிரபுககளும் நாட்டுக்கோட்டைவணிகப் பெருஞ் செலவப் பிரபுக்களும் மற்றெல்லாத் தமிழபிமானிகளும் இத்துணைச் சிறந்த தமிழையும் ஆரியத்தையும் பெரிதும் கவனித்துச் சென்னை காஞ்சி மதுரை முதலிய நகரங்களில் தமிழ்க்கல்லூரிகள் தாபித்து அவ்வவற்றுக்கு ஓர் முதற் பொருளும் அச்சுக்கூடமும வைத்து அவ்விரண்டு பாஷைகளையும் வளர்த்து வருவார்களாயின, இதனினும் புகழ் யாதுளது? புண்ணியம் யாதுளது? இன்பம் யாதுளது? திருவருளும் அங்ஙனமே கூட்டுவிக்க. உலகமானது சூரியனாலும் சந்திரனாலும் மேன்மையடைவதுபோல அவ்விருவகைப் பாஷையாலும் மக்கட் பிறப்புடையார் மேன்மை யடைவரென்பது திண்ணம்.

---

* மொழிநூல் பாயிரவியல் அ௬-ம் பக்கம் பார்க்க.

செந்தமிழ்ப்பத்திரிகை தொகுதி ௬-பகுதிகல், தமிழ்ச்சொல் விளக்கம் பார்க்க.

ஆங்காங்கு தமிழ்த்திருமுறைக் கூடங்களும் தமிழ்ச்சங்கங்களும் தாபித்தல் வேண்டும்.

கண்ணுக்கினிய ஓர் திருமுறைக் கூடமானது சான்றோர் பலர் குழீஇய குழாம்போல்வதாகின்றது. காஞ்சிபுரத்துள்ள தமிழ்ப்பெருஞ்செல்வர்கள் சிறிதே கவனித்தால் அங்காடி மகமையைக்கொண்டு ஓர் தமிழ்க்கல்லூரியும் ஓர்திருமுறைக் கூடமும் தாபிக்கலாமே.

சிங்களம் நெட்டால் ரங்கோன் முதலிய இடங்களிலுள்ள தமிழ்ப்பெருஞ் செல்வர்களும் அவ்வவ்விடங்களில் தமிழ்க்கல்லூரிகளும் திருமுறைக் கூடங்களும் தாபித்தல் வேண்டும்.

வேம்பா காசி முதலிய நகரங்களிலுள்ள ஆரிய கலாசாலைகளில் தமிழையும் கற்பித்தல் நன்று.

இரண்டு பாஷைகளையும் கல்லாமையாலுண்டாகின்ற உச்சரிப்பின் குற்றத்தைப் "பார்ப்பான் தமிழும் வேளாளன் சமஸ்கிருதமும் வழவழ" என்னும் பழமொழியால் அறிந்துகொள்ளலாம்.

உலகிற்கு இருசுடரும் மக்களுக்கு இருகண்ணும் அழகு செய்வனபோல மற்றெல்லாப்பாஷைகளுக்கும் தமிழும் ஆரியமும் உச்சரிப்பினால் அழகு செய்வனவாம்.

அக்கல்லூரிகளில் ஆங்கிலமும் கற்பித்தல் வேண்டும். இந்து கல்விச்சங்கத்தில் தமிழும் ஆரியமும் நடைபெறல் நன்று. இம்முயற்சியை நாட்டுக்கோட்டை வணிகத்தமிழ்ப் பெருஞ்செல்வப்பிரபுக்கள் சிறிது அபிமானித்து முதல் தொடங்குவார்களாயின் மற்றெல்லாத் தமிழ்ப்பெருஞ்செல்வப் பிரபுக்களும் கவனியாமலிருக்கமாட்டார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள ஆங்கில கலாசாலைகள் ஒவ்வொன்றிலும் தமிழும் தமிழ்ப்புலவர்களும் என்றும் இருத்தல் வேண்டும். ஆங்கில நூல்களில் சிலவற்றைக் குறைத்தேனும் திருக்குறள் முதலிய தமிழ் நூல்களைக்கற்பிப்பது ஆவசிகமாகின்றது. தமிழ் மாணவர்கள் முதலில் தமிழ் கொண்டு ஆங்கிலம் கற்றுப் பிறகு அத்தமிழை முற்றும் இகழ்ந்து உதறிவிடுவது என்ன ஞாயம்?

இது தன்னை உயர்நிலையில் விட்ட பெற்றோரை முற்றும் இகழ்வது போலாகின்றதே.

பெற்றோரை இகழினும் தமிழை இகழற்க.

முற்கூறப்பட்ட எல்லாவற்றையும் தமிழ்ப்பெருஞ்செல்வர்கள் எல்லோரும் ஒரு மனப்பட்டு முயற்சித்தல் வேண்டும்.

"வினைத்திட்ப மென்பதொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற" (திருக்குறள்)
"தூங்குக தூங்கிச்செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை" (பொய்யாமொழி)
"செய்தக்கவல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமையானும் கெடும்" (உத்தரவேதம்)

## தமிழ்ப்போதம்.

தமிழர்கள் பெரிதும் பற்றுவைத்துத் தமிழ்நூலைக் கற்றல் வேண்டும். ஏனையோரும் அதனை யிகழாது கற்றல் நன்றே.

வறியனாயினும் தமிழ் கற்க; செல்வனாயினும் தமிழ் கற்க; வறியனாயினும் தமிழ் கற்று மகிழ்வாயாயின் நின்னிலும் செல்வரிலர்; செல்வனாயினும் தமிழ் கல்லாது திரிவாயாயின் நின்னிலும் வறியரிலர்.

தமிழ் கற்க விரும்புவோன் பகைவனாயினும் பகை தணித்துக்கொண்டு தமிழ் கற்பிக்க; எவ்வெவ்விடங்களில் கூடுமோ அவ்வவ்விடங்களிலெல்லாம் தமிழ் கற்பிக்க.

எவ்வளவு கூடுமோ அவ்வளவு கற்க; கற்பிக்க. கேட்க; கேட்பிக்க.

தமிழபிமானமில்லாரென அவரை இகழாது அவர்பால் இனிது அன்புடையனாகித் தமிழ் வரலாறு முதலியன கூறி அவ்வபிமான முண்டாக்குக.

"அன்பினாலாவது அம்பினாலாகாது"
"வேலன்று வென்றி தருவது" (திருக்குறள்)

முதல், இனிது அன்பு கூர்ந்து அவ்வபிமானமுண்டாக்கும் திறமைகளை யெல்லாம் கறிக; கேட்க.

பின், கற்பிக்க; கேட்பிக்க.

இக்காலத்து அத்திறமை அறிந்தவரே புலவராவார். சிறையிருக்கினும் உள்ளக்கிளர்ச்சி கொண்டு தமிழ் கற்க; கற்பிக்க. நரகத்திருக்கினும் கற்க; கற்பிக்க, அபிமானத்தோடு கற்க; கற்பிக்க.

எப்போழ்தும் தமிழையே தெய்வம்போலவும் நற்றாய் போலவும் சிந்திக்க. நீ தமிழ் மயமாவை; நின்மக்களும் தமிழ் மயமாவர்: ஊரும் தமிழ் மயமாம்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" (திருக்குறள்)

கல்வி செல்லம் பத்தியென இம்மூன்றுமே உயிர்க்குயிராமாதலின் வைகறையில் நற்சிந்தையோடு சில கணமேனும் தமிழ் கற்க; சில கணமேனும் கடவுளைப்போற்றுக; பின் பொருண் முயற்சி கருதுக.

எப்பொழுதும் ஆநந்தமயனுருக.

நல்லனகருத வைகறை நன்று; இளமையும் நன்று.

இச்சூழ்ச்சியைச் சிறிதும் மறவற்க.

மற்றெல்லாப் பாஷைகளிலும் தமிழ் ஆரியமென்னும் இரண்டு பாஷைகளின் சம்பந்தமிருத்தலினால் ஒன்றையும் இகழற்க.

"நகையீகை யின்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு."

---

# மூன்றும் பாகம்.

## ஆக்கியோன் விண்ணப்பம்.

திருவருட்சந்நிதியில் தமிழ்ப்பெருஞ் செல்வர்களின் கட்டளையால் மொழிநூலாராய்ச்சி தொடங்கிச்சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. கட்டளைப்படி மொழிநூலாராய்ச்சி மேலு மேலும் நடை பெற்று வருகின்றது.

ஓராண்டில் மொழிநூலாராய்ந்து எழுதிக்கொண்டு வருங்கால் இவகே கொடிய காளரமென்னு நோய் மிகுதிப்பட்டமையின், அப்பொழுது யாக்கை நிலையாமையை எண்ணி எண்ணி ஊக்கத்தோடு திருவருளை வேண்டி இரவும் பகலும் விரைந்து எழுதி வந்தனன்.

ஓர் சொல்லினை ஆராய்ந்து எழுதிக்கொண்டு வருங்கால் பசிமுதலியவற்றால் துன்பமும் இளைப்பும் மிகுமாயினும் அவற்றைப் பொறுத்துக்கொண்டே எழுதிமுடித்தல்வேண்டுமே. அங்ஙனம் பொறுத்துக்கொண்டு எழுதிமுடிக்காவிடின் பிறகு அவ்வாராய்ச்சியின் வன்மை தளர்ச்சியடைகின்றது. அவ்வன்மை பெறுதற்கு மற்றும் அத்துணைக்காலம் உழத்தல் வேண்டும். உழக்கினுமே அவ்வன்மைபெறுவது அரிது.

இவைபோல்வன வெல்லாம் ஆராய்ச்சியின் இலக்கணமாதலால் அவற்றுள் சிலவற்றையேனும் கொள்ளாவிடின் மொழிநூல் ஆராய்ச்சி சொல்லாதென்பது திண்ணம்.

இனி மொழிநூல் சம்பந்தமாகிய நூல்களைமாத்திரம் அச்சிடுவதற்குத் தமிழ்ப்பெருஞ் செல்வர்கள் சிறிது அபிமானித்துப் பொருளுதவி செய்து கொண்டு வருவார்களாயின், ஆராய்ச்சியின் இலக்கணம் பலவும் கொள்ளினும், உழந்த உழப்பெல்லாம் வீணாகாமையின் சிறிதும் துன்பமில்லை; பெரிதும் இன்பமேயாம்.

"முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியும்"
என்று பெரியாரும் பணித்துள்ளார்.
"ஊருணி நீர்நிறைந்தற்றே யுலகவாம்
பேரறிவாளன் திரு"

---

# அச்சிட்ட நூல்கள்.

க. கச்சியிதழகலந்தாதி விலை 0—க—சு
உ. வேளிர்வரலாற்றுமறுப்பு, செந்தமிழ் தொகுதி-ச, பகுதி-ரு,
ங. தமிழ்ச் சொல்விளக்கம் செந்தமிழ் தொகுதி சு, பகுதி-க.
ச. மொழிநூல் விலை உ—0—0.

ஙரு0—பக்கம்=வசனம்.

உயர்ந்த கோலிகக்கட்டு.

ரு. தமிழ் விண்ணப்பம் 0—உ—0.

# இனி அச்சிடப்படு நூல்கள்.

சு. பழந்தமிழ், க00 ரூபாயாகும் அச்சுக்கூலிமுதலியன.

| | | |
|---|---|---|
| எ. மொழிநூல் விளக்கம் | ங00 | ,, |
| அ. மொழிநூல் விளக்க ஆங்கில மொழிபெயர்ப்பு | ச00 | ,, |
| க0. நாவின் இயற்கை விளக்கம் | கரு0 | ,, |
| கக. காரணப்பெயர்க்கொத்து | உ00 | ,, |
| கஉ. மொழிநூற் பெருக்கம் | உ000 | ,, |
| கங. மொழிநூற் சுருக்கம் | க00 | ,, |
| கச. முதனிலை விளக்கம் | க00 | ,, |
| கரு. பிறமொழித் தொகுதி | கரு0 | ,, |
| கசு. மொழிநூற் பிரசங்கம் | க00 | ,, |
| கஎ. சொல்லாராய்ச்சி | க00 | ,, |
| கஅ. சொற்பொருட்போதம் | க00 | ,, |
| கக. பழஞ்சொல் விளக்கம் | எ0 | ,, |
| உ0. முதற்பா. இது ஓர் நீதிநூல் | உ00 | அதிகாரம் |

உக. திருக்குறண் மாட்சிமை
உங. திருக்குறட்பயன். ஓர் நீதிநூல்
உச. அருங்குறள் விளக்கம்

| | | |
|---|---|---|
| ௨௫. நன்னூல் நுட்பவிளக்கம் | ௧௦௦ | ,, |
| ௨௬. இலக்கணக்குறிப்பு | ௧௦௦ | ,, |
| ௨௭. சூரிய தீபிகை | ௧௦௦ | ,, |
| ௨௮. திணைவிளக்கம் | ௧௦௦ | ,, |
| ௨௯. மனோதத்துவ தீபிகை | ௧௫௦ | ,, |
| ௩௦. பொருணூல் | | |
| ௩௧. தமிழ்மொழி விளக்கம் | ௨௦௦ | ,, |
| ௩௨. தமிழ்வெண்பா | | ,, |
| ௩௩. சிற்றளவை | | ,, |
| ௩௪. புலவர்மருந்து | | |
| ௩௫. மருத்துவநூல் | | |
| ௩௬. சோதிட நாற்சுருக்கம் | | |
| ௩௭. போசன தீபிகை | | |
| ௩௮. தொன்மை விளக்கம் | | |
| ௩௯. மரநூல் | | |
| ௪௦. மொழிநூற் சூத்திரம் | ௨௦௦ | ,, |
| ௪௧. குடும்பநூல் | | ,, |
| ௪௨. மகிழ்வுநூல் | | |
| ௪௩. தமிழ்ப்பெருவிண்ணப்பம் | | |
| ௪௪. பிழைதிருத்தக்கொத்து | | |
| ௪௫. அகத்தியர் சரித்திரம் | | |
| ௪௬. தேவார ஆராய்ச்சி | | |
| ௪௭. நாலாயிரப் பிரபந்த அத்தியயன சூடாமணி | | |
| ௪௮. அறிவுநூல் | | |
| ௪௯. தொல்காப்பிய ஆராய்ச்சி | | |
| ௫௦. பஞ்சகாவிய ஆராய்ச்சி | | |
| ௫௧. சங்கநூலாராய்ச்சி | | |
| ௫௨. புராண ஆராய்ச்சி | | |
| ௫௩. திருஞானசம்பந்தர்முதல் தேவாரவிருத்தி | | |
| ௫௪. திருமாகறல் முதல்தேவார விருத்தி | | |
| ௫௫. பூகோளம் | | |

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

ருசு. உரைச்செய்யுள். இது பலபொருடளங்கிய வசன நூல்
ருஎ. யாழோர் கூட்ட மறுப்பு
ருஅ. அரும்பதக்கொத்து உ00 ,,
ருகூ. நிகண்டாராய்ச்சி
சுO. ஆசாரக்கோவை விருத்தி
சுக. மழைநூல்
சுஉ. இயற்கைப் பொருள் விளக்கம்
சுங. மஞ்சிகனிகண்டு. பழமையானது.
சுச. இசைநூல்
சுரு. பொருண்முறை யகராதி உருO ,,
சுசு. காருண்ணிய தீபிகை
சுஎ. நன்னூற் காண்டிகை யுரை உருO ,,
சுஅ. உழவுநூல்
சுகூ. பஞ்சாட்சர தீபிகை
எO. உடற்கூறு
எக. மணவிளக்கம்
எஉ. அருஞ்செய்யுட்டிரட்டு
எங. சமய ஆராய்ச்சி
எச. கச்சியானந்தக்களிப்பு முதலிய உO நூல்கள்
எரு. கல்வெட்டாராய்ச்சி
எசு. சொல்லியைபு விளக்கக்கல்வெட்டு
எஎ. சொல்லியைபு விளக்கச் செப்பேடு
எஅ. மொழிநூல் முதலியவற்றுக்குப் பொருளுதவி செய்தோர்க்கு நன்றிகூறல்.
எகூ. ஆசிரியர் சரித்திரம்
அO. நூலாசிரியர் சரித்திரம்.

---

உடனே பழந்தமிழ் அச்சிடப்படும்.

மொழிநூல் விளக்கத்திற்கு முன்னேயே திருஞான சம்பந்தர் முதல் தேவார விருத்தியும், திருமாகறல் முதல் தேவாரவிருத்தியும் அச்சிடப்படும்.

முதற்பா முதலிய ௧0-நூல்வரையில் முற்றுப்பெற்றிருக்கின்றன. மற்றைய நூல்களுக்குக் குறிப்புகள் இருக்கினறன' ஒவ்வொன்றாக எழுதிமுடிப்பல். மொழிநூற்பெருக்கம் எழுதிக்கொண்டு வருகின்றனன்.

தமிழ்ச்செல்வர்கள் ஒவ்வொருவரும் இப்பொழுது அச்சிட்டிருக்கிற மொழிநூலை வாசித்தால்தான் இனி அச்சிடப்படும் பழந்தமிழ்முதலியன நன்கு விளக்கமாகும். தமிழ்ச்செல்வர்களுக்கு மொழிநூல் ஆவசியகமானது. மொழிநூல் வாங்குகின்றவர்கள் அதனை யிழந்துவிடாமல் காப்பாற்றவேண்டும். பிறகு கிடைக்கமாட்டாது.

இங்ஙனம்

தமிழபிமானிகளின் வழிவழி உழுவலன்பன்

மாகறல், கார்த்திகேயன்.